வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண். 0388 / அ3 / 2018 நாள். 18 –01–2018

பொருள் தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – 01.01.2018 அன்றைய நிலவரப்படி அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு பதவி உயர்வு மூலம் நியமனம் செய்திட தகுதி வாய்ந்த இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் பட்டியல் தயாரித்தல் – பதவி உயர்விற்கு கருத்துருக்கள் அனுப்ப கோருதல் சார்பு .

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந..க.எண்004830/ சி3 /இ1/ 2018 நாள் 18–01–2018

• • •

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களில் பட்டதாரி ஆசிரியர்கள் (தமிழ் வழி / சிறுபான்மை மொழி வழி – அனைத்துப் பாடங்கள்) பதவி உயர்வுக்கு கீழ்க்கண்ட தேதிவரை தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயார் செய்வதற்காக சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது.

மேலும் அதில் கீழ்க்கண்ட விவரங்களை உள்ளடக்கிய முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்ய அறிவுரை வழங்கப்படுகிறது.

| வஎண் | பாடம் | இநிஆ / சிறப்பாசிரியர் / உகஆ பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|
| 1 | தமிழ் | 31.01.2000 |
| 2 | ஆங்கிலம் | 31. 12. 2017 |
| 3 | கணிதம் | 31. 12. 2017 |
| 4 | அறிவியல் | 31. 12. 2017 |
| 5 | வரலாறு | 31. 12. 2009 |
| 6 | புவியியல் | 31. 12. 2017 |

பட்டதாரி ஆசிரியர் (தமிழ் வழி / சிறுபான்மை மொழி வழி–அனைத்துப் பாடங்கள்) காலிப் பணியிடங்களைப் பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்யும் பொருட்டு 01–01–2018 தேதியில் பட்டதாரி ஆசிரியர் (தமிழ் வழி / சிறுபான்மை மொழி வழி – அனைத்துப் பாடங்கள்) பதவி உயர்வு வழங்கத் தகுதி பெற்ற அனைத்து அரசு மற்றும் நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் விவரங்களை (நகராட்சிப் பள்ளிகளில் 01–06–1986க்கு முன்னர் நியமனம் செய்யப்பட்டவர்கள் நீங்கலாக) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் (கலம் 1 முதல் 29 முடிய உள்ளவை) பாடவாரியாக மொழி வாரியாகத் தனித்தனியாகத் தொகுத்து, கீழ்க்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றி உரிய ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்து, தலைமை ஆசிரியரின் மேலொப்பத்துடன் தனிநபர் மூலம் விவரங்களை ஒப்படைத்திட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1) பட்டியலில் இடம் பெறும் ஆசிரியர்கள் 31–12–2017 அன்று குறிப்பிட்ட பாடத்தில் இளங்கலைப் பட்டச்சான்றும், பி.எட்., பட்டச்சான்றும் (குறைந்த பட்சம் Provisional Certificate – ஆவது) வைத்திருக்கவேண்டும்.

2) வெளி மாநிலச் சான்று எனில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

3) 01–01–2015 அல்லது அதற்குப் பின் பட்டதாரி ஆசிரியர் (தமிழ் வழி / சிறுபான்மை மொழி வழி – அனைத்துப் பாடங்கள்) பதவி உயர்வினைத் தற்காலிகத் துறப்பு செய்தவர்கள் மற்றும் ஏற்கனவே பட்டதாரி ஆசிரியர் (அனைத்து பாடங்கள்) பதவி உயர்வினை நிரந்தரத் துறப்பு செய்தவர்களின் பெயர்கள் பட்டியலில் எக்காரணத்தைக் கொண்டும் இடம் பெறக்கூடாது.

4) ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 1995–ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டவர்கள் சார்ந்த விவரங்களை அளிக்கும்போது அவர்கள் தேர்வு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் தர எண் (வருடம் மற்றும் ரேங்க் எண்) தவறாமல் குறிப்பிட வேண்டும். (நியமன ஆணையின் நகல், படிவத்துடன் இணைக்கப்படவேண்டும்)

5) ஆசிரியர்களின் பிறந்த தேதி, நியமன முறை கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றிருப்பின் அதன் விவரம், ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிருப்பின் அதன் விவரம், போன்றவற்றை உறுதி செய்து சரியாக அளிக்கவேண்டும்.

6) நகராட்சிப் பள்ளிகளில் 01–06–1986க்கு முன்னர் நகராட்சி ஆணையரால் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் இடைநிலை ஆசிரியர்களின் பெயர்கள் பட்டியலில் இடம் பெறுதல் கூடாது.

7) பட்டதாரி ஆசிரியர் (தமிழ் வழி / சிறுபான்மை மொழி வழி – அனைத்து பாடங்கள்) இளங்கலைப் பட்டம் பெற்றிருப்பின் அத்தகைய ஆசிரியர்கள் அனைவரின் விவரங்களும் சிறுபான்மை மொழி வாரியாகத் தனித்தனியே பட்டியலிட்டு அனுப்ப வேண்டும். (மேற்படி ஆசிரியர்கள் தமிழ் மொழித் தேர்வு பகுதி–2 தேர்ச்சி பெற்ற விவரங்களுடன் கருத்துருக்கள் அனுப்பப்படவேண்டும், சிறுபான்மை மொழி ஆசிரியர்களைப் பொறுத்தவரை உரிய காலத்திற்குள் தமிழ் மொழித் தேர்ச்சி பெறாதவர்கள் இப்பட்டியலில் சேர்க்கப்படக்கூடாது.)

8) தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்டுப் பின்னர் 01–09–1992 / 01–06–2006ல் முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஆசிரியர்களது முதன் முதலில் நியமனம் செய்யப்பட்ட நாள் கலம் எண்.8ல் பணிப்பதிவேட்டை சரிபார்த்து பூர்த்தி செய்யப்படவேண்டும். அதற்கான பணிப்பதிவேட்டின் பக்க நகல் இணைக்கப்படவேண்டும்.

9) ஓராண்டு முறையில் இரட்டைப்பட்டம் பெற்றவர்கள் சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். WA.259/2013–ல் 05–02–2014ம் நாளிட்ட தீர்ப்பில் ஓராண்டு முறையில் இரட்டைப்பட்டம் பெற்றவர்கள் பதவி உயர்விற்குத் தகுதியில்லை எனத் தெரிவித்திருப்பதால் தற்போது 01–01–2018ம் ஆண்டுக்கான முன்னுரிமைப் பட்டியலில் அவ்வாறு பயின்றவர்களின் விவரங்கள் இடம் பெறக்கூடாது.

10) அ.ஆ.எண்.165 ப.க.து. நாள்.15.10.2014ன்படி இரண்டு ஆண்டு ஆசிரியர் பட்டய பயிற்சி சான்றினை (D.T.Ed) மேல்நிலைக் கல்விக்கு (+2) இணையாக கருதி ஆணை வெளியிடப்பட்டுள்ளதால் அதன்படி தகுதி பெற்றவர்கள் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும்.

11) அ.ஆ.எண்.95 ப.க.து. நாள். 05.05.2015ன்படி 20.05.2002–க்கு முன்னர் எஸ்.எஸ்.எல்.சி (பத்தாம் வகுப்பு) கல்வித் தகுதியுடன் தொழிற்கல்வி மேல்நிலை சான்றுக்குப் (Hr.Gr) பின் பெறப்பட்ட தொழிற்கல்வி ஆசிரியர் சான்றினை (TTC) மேல்நிலைக் கல்விக்கு (+2 தேர்ச்சிக்கு) இணையாக கருதி ஆணை வெளியிடப்பட்டுள்ளதால் அதன்படி தகுதி பெற்றவர்கள் இருப்பின் அவர்களது பெயரினையும் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும்.

மேலும் பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள் சார்பாக கீழ்க்கண்ட சான்றுகளின் நகல்களை (பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பக்கத்தின் நகல்களை) தலைமை ஆசிரியர் தனிகவனத்துடன் சரிபார்த்து அனுப்புதல் வேண்டும்.

அ. இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் நகல் (முற்பகல்/பிற்பகல் தெளிவாக கலம் எண்.11ல் குறிப்பிடப்படவேண்டும்)

ஆ. இடைநிலை,உடற்கல்வி / சிறப்பாசிரியர்கள் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட ஆணையின் நகல்

இ. தமிழ்மொழித் தேர்வு தேர்ச்சி பெற்றமைக்கான சான்றின் நகல்

ஈ. பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சான்றுகளின் நகல்கள்

உ. வேறு மாநில பட்டம் / பட்டயச்சான்றாக இருப்பின் அதை மதிப்பீடு செய்யப்பட்ட (Evaluation) சான்றின் நகல்

தலைமை ஆசிரியர்களிடமிருந்து பெறப்படும் ஆசிரியர்களின் கருத்துருக்கள் மட்டுமே முன்னுரிமைப்படி பரிசீலிக்கப்பட்டு பட்டதாரி ஆசிரியர் (தமிழ் வழி / சிறுபான்மை மொழி வழி – அனைத்து பாடங்கள்) பதவி உயர்விற்கான முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறுவார்களாதலால், இப்பொருளில் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தி, மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி ஆசிரியர்களின் விவரப்பட்டியலை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் எந்த ஒரு காலமும் விடுபடாமல் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து **படிவம் மற்றும் அனைத்து இணைப்புகளுடன் இரண்டு நகல்களில்** தனிநபர் மூலம் கீழ்க்குறிப்பிட்டுள்ள நாட்களில் நடைபெறும் முகாமில் நேரில் சமர்ப்பிக்க நடவக்கை எடுக்குமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு தகுதிவாய்ந்தவர் எவர் பெரும் விடுபடவில்லை என்பதற்கான சான்று தலைமை ஆசிரியர் இணைக்கப்பட வேண்டும். பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு தகுதிவாய்தவர்கள் எவரும் இல்லாத பள்ளி தலைமை ஆசிரியர்கள் இன்மை அறிக்கையினை அஞ்சல் மூலம் தவறாமல்
23-01-2018க்குள் இவ்வலுவலகத்தற்கு அனுப்புதல் வேண்டும்.

| வ. எண் | கல்வி மாவட்டம் | சமர்பிக்க வேண்டிய நாள் | சமர்பிக்க வேண்டிய இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | திருப்பத்தூர் கல்வி மாவட்டம் | 24-01-2018 | மஸ்ருலும் மேல்நிலைப் பள்ளி, ஆம்பூர் | காலை 10.00 மணி முதல் மாலை 03.00 மணிகுள் |
| 2 | வேலூர் கல்வி மாவட்டம் | 25-01-2018 | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஆற்காடு | |

பட்டதாரி ஆசிரியர் (தமிழ் வழி / சிறுபான்மை மொழி வழி—அனைத்துப் பாடங்கள்) பதவி உயர்வுக்குத் தகுதிவாய்ந்த எந்த ஒரு ஆசிரியர் பெயரும் விடுபடவில்லை எனச் சான்ற தலைமை ஆசிரியரால் வழங்கப்படவேண்டும்.

மேலும் முன்னுரிமைப் பட்டியலில் பெயர் விடுபட்டதாகத் தெரிவித்து, எந்த ஆசிரியரிடமிருந்தாவது முறையீடு ஏதும் பின்னர் பெறப்படின் அதற்குச் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியரே முழுப்பொறுப்பேற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: SGT & SPL teachers to BT Promotion Panel Form-BT
(All Subjects) (1-29 Columns)

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
தலைமை ஆசிரியர்
அரசு/ நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

நகல்
1. மாவட்டக் கல்விஅலுவலர்
   வேலூர் / திருப்பத்தூர்
2. தலைமை ஆசிரியர்
   மஸ்ருலும் மேல்நிலைப் பள்ளி, ஆம்பூர்
3. தலைமை ஆசிரியர்
   அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஆற்காடு
   (குறிப்பு மேற்குறிப்பிட்டுள்ள பள்ளி தலைமை ஆசிரியர்கள் முகாம் நடைபெறும் நாளன்று இருக்கை வசதி, குடிநீர் வசதி மற்றும் அறை வசதி செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)

// தலைமை ஆசிரியரின் கவனத்திற்கு //

## படிவம் மற்றும் கருத்துருக்கள் இரண்டு நகல்களில் கீழ்க்குறிப்பிட்டுள்ள இணைப்புகள் வாரியாக தனித்தனியாக சமர்பிக்க வேண்டும்.

இடைநிலை ஆசிரியர் மற்றும் சிறப்பு ஆசிரியர் பதவியிலிருந்து பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு தேர்ந்தோர் பட்டியல் பரிந்துரைக்கப்படும்போது கீழ்க்காணும் ஆவணங்களை வரிசைப்படி கண்டிப்பாக கருத்துருவில் பெற்று இணைக்கப்படவேண்டும்

1) 29 கலம் கொண்ட படிவம்

2) இநிஆ/சிறப்பாசிரியர்/உகஆ பதவியின் பணிநியமன ஆணை நகல் (Appointment order)

3) இநிஆ / சிறப்பாசிரியர் / உகஆ பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணை நகல் (அ) முறையான நியமனம் எனில் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாளான பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்க நகல்.

4)தகுதிகாண் பருவ ஆணை நகல் இணைக்கவும்

5)ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எனில் TRB Rank No கண்டிப்பாக படிவத்தில் தெரிவிக்கப்படவேண்டும்.

6) தொடக்கக் கல்வி துறை / பிறதுறையிலிருந்து அலகு விட்டு அலகு (அ) ஈர்த்துக் கொள்ளப்பட்டவர் எனில் அவ்வாணையின் நகல் மற்றும் ப.க.து.யில் பணியில் சேர்ந்த நாள் பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்க நகலினை இணைக்கவும்.

7) 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் நகல்

8) 12ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் நகல்

9) இநிஆ பொறுத்தவரையில் 12ம் வகுப்பு பயிலவில்லை எனில் D.Ted சான்றின் நகல் இணைக்கவும்.

10) சிறப்பாசிரியர்கள் பொறுத்தவரையில் 12ம் வகுப்பு பயிலவில்லை எனில் Hr.Gr / TTC சான்றின் நகல் இணைக்கவும்.

11) இளங்கலையில் பட்டம் பயின்ற (பி.ஏ/பி.எஸ்ஸி) சான்று குறைந்தபட்சம் Provisional Certificate ஆவது இணைக்கப்படவேண்டும். அதோடு பி.ஏ/பி.எஸ்ஸி மூன்றாண்டு படித்தமைக்கான Duration Certificate (or) Three years Mark Sheet நகல் இணைக்கவும்.

12) தொழிற்கல்வி (பி.எட்) சான்று குறைந்தபட்சம் Provisional Certificate ஆவது இணைக்கப்படவேண்டும். மற்றும் மதிப்பெண் பட்டியல் இணைத்தல் வேண்டும்.

13) வெளிமாநில சான்று எனில் மதிப்பீடு செய்யப்பட்ட ஆணை நகல் இணைக்கவும்.

14) ஒரே கல்வியாண்டில் (Same year) அதாவது பி.ஏ.,/பி.எஸ்ஸி மற்றும் பி.எட்., பயின்றால் பரிந்துரைக்ககூடாது.

15)ஓராண்டு முறையில் இரட்டைப்பட்டம் மூலம் பட்டம் பயின்றவர்களை (Double Degree) பரிந்துரைக்ககூடாது.

16) ஏற்கனவே பதவி உயர்வினை தற்காலிகமாக பணித்துறப்பு செய்திருப்பின் அவ்வாணையின் நகல் (அ) பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்க நகல் இணைக்கவும்.

17)சிறப்பாசிரியர்கள் / உ.க.ஆ.களை பொறுத்தவரையில் கண்டிப்பாக இளங்கலை (U.G.Degree) மற்றும் தொழிற்கல்வி (B.Ed.,Degree) பட்டயச்சான்று இருந்தால் மட்டுமே பரிந்துரைக்கப்படவேண்டும்.

18) இளங்கலை மற்றும் தொழிற்கல்வி படிப்பினை 31.12.2016 அன்றைய நாளில் சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும்.

19)இடைநிலை ஆசிரியர்களை பொறுத்தவரையில் தமிழ்ப்பாட பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு முன்னுரிமைப் பட்டியலில் சேர்ப்பதற்கு இளங்கலையில் மட்டும் தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது (B.A. (or) B.Lit Tamil) பி.எட்., சான்று முடித்திருக்க அவசியமில்லை.

20. அசல் கல்வி சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடு தவறாமல் கொண்டு வரப்படல் வேண்டும் .

21. மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் பதியப்பட்டுள்ள பணிப்பதிவேட்டின் பக்கங்கள் இரண்டு நகல்களில் உரிய கருத்துருவுடன் சான்றொப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

22. கருத்துருக்கள் அனுப்பப்படும் ஆசிரியரின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் என்ற சான்று வழங்கப்பட வேண்டும் ( மாதிரி சான்று இணைக்கப்பட்டுள்ளது)